போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 APR 1941
MADRAS

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

கோத் ... 15 ஏப்பிரல்-மே 1941 மலர் 10, 11

... றை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

தனிப்பிரதி அணா 1½.

JL.
00211,N11PP
N41.31.10,11
182453

BODHANA VISHAYA POONGOTHU

Magazine of Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	281
2.	சென்னை கல்வி இலாகா—சுற்றுத்தரவுகள் ...	284
3.	விளையாட்டு சுபாவ உணர்ச்சி	285
4.	முதியோர் கல்வி	288
5.	சுகாதாரம்	290
6.	பாடக் குறிப்பு	291
7.	கிராமாந்தரப் பாடல்கள் or சமுதாயப் பாட்டுகள் ...	294
8.	யோசனைக் கணக்கு	296
9.	மற்றவர்கள் எங்கே?	297
10.	அரணைப்புத்தி	299
11.	சிறுவர் சம்பாஷணை	302
12.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	305
13.	பழைய மாணவர் சங்கம்	308
14.	Music (கடவுள் மகிமை)	310
15.	விடுகவி விடைகள்	311

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher:
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

ஏஜெண்டுகள் தேவை! ஏஜெண்டுகள் தேவை!!

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து 31] 15 ஏப்ரல்–மே 1941 [மலர் 10, 11

பத்திராதிபர் குறிப்புகள்

பழைய மாணவர்கட்கு நன்றி. சென்ற மாதம் நடைபெற்ற பழைய மாணவர் தினக் கொண்டாட்டத்தின் முழு விவரத்தையும் மற்றோரிடத்தில் பிரசுரித்துள்ளோம். காண்க.

அவ்வமயம் நமது பழைய மாணவர்களிற் பலர், தாய்ப்பாடசாலையின் மட்டில் தங்களுக்குள்ள அன்பையும், அனுதாபத்தையும் காட்டுவதற்கு அறிகுறியாகப் பலவித நன்கொடைகளையும், இந்த வருஷப் பரீட்சையில் திறமையாகத் தேறுபவர்கட்கு வெள்ளிப்பதக்கப் பரிசுகளையும், இன்னும் நமது **பூங்கோத்தின்** அபிவிருத்திக்காகப் பணவுதவியையும் அளிப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார்கள். அத்தகையோர் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்ளுவதுடன், அவர்கட்குத் தாய்ப் பாடசாலையின்மட்டிலுள்ள அன்பு குன்றாதிருக்கும்படி இறைவனை வேண்டிக்கொள்ளுகிறோம்.

மேலும் அவர்கள் தத்தம் வாக்குத்தத்தங்களைச் சரியாக நிறைவேற்றி, மேலும் மேலும் தாய்ப் பாடசாலையின் அன்பையும் ஆதரவையும் பெற்று நாளுக்குநாள் நன்கு விளங்குவர் என நம்புகின்றோம்.

* * *

பூங்கோத்துப் பரிசு :—இவ்வருஷம் பயின்று வெளியேறியுள்ள பழைய மாணவர்களுள், அடுத்த செப்டம்பர் மாதத்திற்குள் நம் **போதனுவிஷயப் பூங்கோத்துக்கு** அதிக சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுக்கும் எந்த பழைய மாணவருக்காயினும், ஒரு **வெள்ளிப் பதக்கப் பரிசு** உண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறோம். தாயின்மட்டில் தனயனுக்குள்ள அன்பை பிரபலப்படுத்த இது ஒரு தக்க சந்தர்ப்பமன்றோ?

நமது வாசகர்களுக்கோர் அறிவிப்பு :

சென்ற மாதம் நடந்தேறிய நம் பழைய மாணவர் தினக் கொண்டாட்டத்திற்குத் "தலைமை" வகித்தவரும், நமது "பூங்கொத்தின்" முக்கிய **பரிபாலகரும்,** நம் பாடசாலையின் முன்னேற்றத்தில் வெகுவாய் ஈடுபட்டு வருபவருமாகிய **ராவ்பகதூர் ஸ்ரீ N. S. குழந்தைஸ்வாமி பிள்ளை** அவர்கள் (Retired Deputy Director of Agriculture) விவசாய நிபுணர் என்பது அனைவர்க்கும் தெரிந்ததொன்றே. அவர்கள் தமது வாசஸ்தலத்திற்கருகே விசாலமானதோர் விவசாயப் பண்ணையொன்று அமைத்து அதனை வெகு விமரிசையுடன் நடத்தும் பான்மை வியக்கத்தக்கதாகும்.

அன்னவர் விவசாய விஷயமாய்—அதாவது—எரு சேர்த்தல், விதைகள் தெரிந்தெடுத்தல், உழுதல், எருவிடுதல், மாசூல் அதிகம் காணும்படி உழைக்கும் வகைகள், பயிர், பச்சை நோய் நிவாரண முறைகள் முதலிய பற்பல காரியங்களைப்பற்றி எந்த விதமான சந்தேகமானாலும் நமது பூங்கொத்தின் மூலமாக அதைத் தீர்க்கவும், ஆலோசனை கூறவும் தாம் சித்தமாய் இருப்பதாக மிகப் பரிவுடன் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். விசேஷமாக, நமது கிராமாந்திர ஆசிரியர்கள் ஷை விஷயமாய்க் கேட்க விரும்பும் சகல சந்தேகங்களுக்கும் பதிலளிக்கச் சித்தமாயிருக்கின்றனர். இதற்காக நாம் அன்னவர்க்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். எனவே, விருப்பமுள்ளோர் தங்கள் தங்கள் கேள்விகளையும் சந்தேகங்களையும் **பூங்கோத்தின்** வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, விடைகளையும் **பூங்கோத்தின்** மூலம் அன்னவரிடமிருந்து பெற்று பயனடையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

கற்பக நூலகம்
182453

* * *   * * *   * * *

New Admissions.—அடுத்த ஜூலை மாதம் இப்பாடசாலையில் சேர்ந்து போதனைமுறைப் பயிற்சி பெற விரும்புவோர் இதனடியில் வரும் ஒழுங்குகளைக் கவனிக்கக்கடவர் :—

1. இப்பாடசாலையில் அச்சிட்ட அப்ளிகேஷன் பாரத்தை, (Application Form), அதில் குறித்துள்ள விதிகளின்படி பூர்த்திசெய்து அதை மே-மீ 31-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் **தலைமை ஆசிரியருக்கு** அனுப்பவேண்டும். பாரம் ஒன்றுக்கு 2 அணு வீதம் ஸ்டாம்பு அனுப்பியே தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளத்தகும். கத்தோலிக்கர்கள் தத்தம் பங்கு சுவாமிமார் மூலமாய் மனுசெய்துகொள்ளவேண்டும்.

2. ஷை போதனை பயிற்சிக்கு **செக்கண்டரி** கிரேடில் 40 மாணவர்களையும், **எலிமேண்டரி ஹையர்** கிரேடில் 80 மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள வசதி ஏற்படுத்தியிருக்கிறது.

3. **அடுத்த ஜூன்-மீ 30-ம் தேதி திங்கள்கிழமை காலை 8 மணிக்கு இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரின்முன் ஆஜராகி, ப்ரவேசக்கட்டணம் ரூ. 2—0—0 சேலுத்தி, ப்ரவேசப் பரீட்சை எழுதித் தேறத எந்த மாணுக்கரும் சேர்த்துக்கோள்ளப்படமாட்டார்கள்.**

குறிப்பு :—1. செக்கண்டரி கிரேடுக்கு : (1) ஆங்கில வியாசம் (English Composition) (2) தமிழில் பொது அறிவு (General Knowledge) ஆகிய இரண்டு பாடங்களிலும், எலிமெண்டரி ஹையர் கிரேடுக்கு :—(1) பொது அறிவு (2) கணக்கு ஆகிய இந்த இரண்டு பாடங்களிலும் ப்ரவேசப் பரீட்சை நடத்தப்படும்.

2. ப்ரவேசக்கட்டணம் ரூ. 2-0-0-ல் பரீட்சை நாளன்று சாப்பாடு, இடவசதி, கேள்வி, விடைப்பத்திரங்கள் விடைப்பத்திரங்களைத் திருத்துதல் முதலியவற்றிற்கேற்படும் செலவுகள் அடங்கும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களனைவரும் சேர்க்கைப்பதிவு (Admissions) செய்யும்போது ரூ. 10 "டிபாசிட்" (Deposit) கட்டவேண்டியது அவசியமாகும்.

4. எலிமெண்டரி ஹையர் கிரேடுக்கு வழக்கம்போல் ஸர்க்கார் ஸ்டைபெண்டு (Stipends) வழங்கப்படும்.

சென்னை கல்வி இலாகா—சுற்றுத்தரவுகள்

Proceedings of the Director of Public Instruction, Madras

(C. No. 1057. B/41 dated 22-3-1941.)

கைத்தொழிலுக்கு (கைவேலைக்கு) முன்னணியாகக் கற்பிக்கப்படும் பாடபோதனைக்குக் கிராண்டு Grant for instruction in Pre-Vocational subjects.

ஷை உத்தரவின்படி :—(1) அரசாங்க திரவிய சகாயம் பெறும் ஒவ்வொரு ஹையர் எலிமேண்டரி பாடசாலையிலும் (Higher Elementary School) அடுத்த ஜூன்-மீ 1-ம் தேதியிலிருந்து, யாதாம் ஒரு கைவேலைப் பாடத்தைக் (One pre-vocational subject) கட்டாயமாக ஏற்படுத்தி நடத்தவேண்டியது அவசியமாகும். தவறக்கூடாது.

(2) அந்தக் கைவேலையைக் கற்றுக்கொடுக்கத் தகுதி வாய்ந்த ஆசிரியரொருவரை நியமித்து, அவருக்குரிய டீச்சிங் கிராண்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

(3) மேலும் அந்தக் கைவேலைப்பாடத்திற்குத் தேவையாகும், சாதனப்பொருள்கள், உபகரணங்கள் முதலியவற்றை வாங்கி அமைப்பதற்கேற்படும் செலவில் **பாதி செலவை** அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டு, அந்தப் பாதி செலவுக்கும் கிராண்டு கொடுப்பார்கள். ஆனால் அந்த செலவுத் தொகை ரூ. 100-க்கு மேற்படக்கூடாது.

(4) ஷை ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரே ஒரு கைவேலைப் பாடத்துக்குத்தான் ஷை டீச்சிங் கிராண்டும், உபகரண கிராண்டும் உண்டு.

(5) ஷை கைவேலைப்பாடத்திற்குரிய உபகரணங்களை வாங்குவதற்காக, உபகரண கிராண்டைப் பெற, அடுத்த செப்டெம்பர்-மீ 1-ம் தேதிக்குள் ஜில்லா கல்வி அதிகாரிக்கு-பில் (bill) அனுப்பி மனு செய்துகொள்ளவேண்டும்.

(6) 1942-ம் ஹு பெப்ருவரி அல்லது மார்ச்சு மாதத்தில் ஷை விஷயமான டீச்சிங் கிராண்டு அளிக்கப்படும்.

விளையாட்டு சுபாவ உணர்ச்சி

(Instinct of Play)

(A. D. M. பிரகாசம், B.A., L.T.)

சிறு குழந்தைகள் தங்கள் முழு நேரத்தையும் விளையாட்டிலேயே செலவழிக்க ஆசைப்படுகின்றனர். பெரியவர்களாகிய நாம் நமது அந்தஸ்துக்குரிய தொழில்களைச் செய்வதில் முழு கவனத்தையும் செலுத்துகிறோம். குறிப்பிட்ட நேரத்தில் வேலைக்குப்போக நாம் எப்படி முஸ்திப்புச் செய்கின்றோமோ அதேமாதிரியாக, சிறு குழந்தைகளும் படுக்கையைவிட்டு எழுந்தவுடன் காப்பி சாப்பிட்டுவிட்டு, தங்கள் விளையாட்டு சாமான்களையெல்லாம் தேடியெடுத்துக்கொண்டு தோழர்களை நாடிச் செல்லுகின்றனர். ஆகவே பெரியவர்கள் தங்கள் வேலையில் காட்டும் கவனத்தையும் ஊக்கத்தையும், சிறு குழந்தைகள் விளையாட்டில் காட்டுகின்றனர். அநேக சந்தர்ப்பங்களில் தங்கள் உணவையும் மறந்து விளையாட்டில் ஈடுபட்டிருப்பார்கள். குழந்தைகளுக்கு எல்லாம் விளையாட்டே. குழந்தைகள் இம்மாதிரி விளையாடுவதை நாம் தடுக்கக்கூடாது. ஏனெனில் பிள்ளைகள் விளையாட்டின் மூலம்தான் சரீர வளர்ச்சியையும், சரீர வளர்ச்சியின் பயனாக மன வளர்ச்சியையும் பெறுகின்றனர். சிறு குழந்தைகள் விளையாடுவது அவர்களது மூளையின் சுறுசுறுப்புத் தன்மையையே காட்டுகின்றது. பிள்ளைகள் விளையாட்டில் ஈடுபட்டுதான் அறிவு வளர்ச்சியை யடைகின்றனர்.

விளையாட்டு என்றால் என்ன? வேலையென்றால் என்ன? இவ்விரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று சற்று பார்ப்போம். ஒருவனுக்கு வேலையாய் இருப்பது மற்றொருவனுக்கு விளையாட்டாகவும், ஒருவனுக்கு விளையாட்டாய் இருப்பது மற்றொருவனுக்கு வேலையாகவும் தோன்றலாம். இந்த வித்தியாசம் வேலையையோ விளையாட்டையோ செய்பவனுடைய மனப்பான்மையைப் பொறுத்திருக்கின்றது. பள்ளிக்கூட விழாவன்று நாம் ஒரு தமிழ் நாடகத்தை நடிக்கின்றோம். பள்ளிக்கூடத்து மாணவ-நடிகர்கள் சங்கீதங்களைப் பாடுகின்றனர். அருமையாய் நடிக்கின்றனர். நாடகக் கம்பெனியாரைப்போல் நாடகத்தை நடித்து முடிக்கின்றனர். காலப்போக்குக்காகவும், பள்ளிக்கூட விழாவைச் சிறப்பிப்பதற்காகவுமே மாணவர்கள் நாடகத்தை நடித்தனரேயொழிய இலாபம் கருதி நடிக்கவில்லை. ஆகையால்

மாணவர்கட்கு நாடகம் நடித்தது வேலையல்ல. இது அவர்களுக்கு விளையாட்டே. அப்படியல்லாமல் இதே மாணவ-நடிகர்கள் தங்களுக்குச் சம்பளம் கிடைக்குமென்ற நோக்கத்துடன் நாடகக் கம்பெனியில் சேர்ந்து நடிப்பார்களேயானால் இவர்கள் செயல் விளையாட்டாக இல்லாமல் வேலையாக மாறிவிடும்.

எல்லாக் கல்விக்கும் அடிகோலியாக இருப்பது "விளையாட்டு" ஆகையால் குழந்தைகள் விளையாடுவதை நாம் தடுக்கக் கூடாது. எந்தெந்த விஷயங்கள் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கின்றதோ அவற்றையே சிறு குழந்தைகள் பயிற்சிக்கின்றனர். பயிற்சித்துக் கற்றுக்கொள்கின்றனர். "நோக்கம் பற்றிய" விளையாட்டுகளில் பிள்ளைகளை நாம் ஈடுபடும்படிச் செய்வோமானல், நம் குழந்தைகள் பெரிதும் பயன் எய்துவர். இந்தக் கருத்தையே அடிப்படையாகக்கொண்டுதான் விளையாட்டுமுறையில் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்று அநேக நவீன மனோ சாஸ்திரிகள் வற்புறுத்துகின்றனர்.

விளையாட்டு சுபாவ உணர்ச்சியின் ஆரம்பம். அதன் முக்கிய தன்மைகள் முதலியவற்றை ஆராய்ந்துபார்த்து சில உண்மைகளை, மனோசாஸ்திரிகள் வெளியிட்டிருக்கின்றனர். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்பவர், எல்லா ஜீவப்பிராணிகளும் விளையாடுவதற்கு முக்கிய காரணம் அவர்களிடத்து எஞ்சியுள்ள சக்தியே என்று சொல்லுகிறார். எல்லா உயிர் பிராணிகளிடத்தும் வேண்டிய சக்திக்குமேல் சக்தி மிகுந்துவிட்டால், எஞ்சின சக்தி விளையாட்டுமூலம் செலவழிக்கப்படவேண்டியதாய் இருக்கிறது. இதற்குத்தான் "எஞ்சியுள்ள சக்தி" கொள்கை (Surplus Energy Theory) என்று பெயர். இக்கொள்கையில் கொஞ்சம் உண்மையிருந்தபோதிலும், முற்றும் உண்மையானது என்று சொல்வதற்கில்லை. கார்ல்குரூஸ் என்ற கல்விமான், குழந்தைகளின் விளையாட்டு, பிற்கால ஜீவியத்திற்கு அவைகளைத் தயார் செய்கிறது, என்ற கொள்கையை வெளியிட்டார். உதாரணமாய் ஒரு பெண் குழந்தை தன் செலுலாய்டு பொம்மையை மடியில் வைத்துக்கொண்டு, அப்பொம்மைக்குப் பாலூட்டி, தாலாட்டி, சிறு கந்தைத் துணியை எடுத்து உடுத்தி, இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு செல்லுகிறது. இம்மாதிரி விளையாடும்போது, பெண் குழந்தை தனது பிற்கால தாய்த் தொழிலைச் செய்து பழகுகிறது. இக்கொள்கையிலும் கொஞ்சம் உண்மைதான் உண்டு. ஸ்டான்லிஹால் என்பவர் "திருப்பிப்பார்த்தல் கொள்கையை"

(Recapitulation Theory) வெளியிட்டார். "முன்னோர்கள் செய்த செய்கைகளைக் குழந்தை செய்வதே விளையாட்டு" என்று ஸ்டான்லிஹால் அபிப்பிராயப்படுகின்றார். நமக்கு இப்போது, விளையாட்டாய்த் தோன்றும் செயல்கள், அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன் வசித்துவந்த முன்னோர்களுக்கு முக்கிய வேலைகளாய் இருந்தன. சிறு குழந்தைகளுக்கு விளையாட்டாகத் தோன்றும், "வீடு கட்டுதல்," "வேட்டையாடுதல்" முதலியவை முற்காலத்து மனிதர்களுக்கு முக்கிய வேலைகளாயிருந்தன. கடைசியாய்க் "**கத்தார்ட்டிக் கொள்கை**" என்னவென்று பார்ப்போம். "நம்மிடத்தில் தோன்றியுள்ள இயற்கை சுபாவ உணர்ச்சிகளையும், மனோவெழுச்சிகளையும், அவைகளின் அறுவறுக்கக்கூடிய தன்மையிலிருந்து பரிசுத்தப் படுத்துவதே விளையாட்டு" என்று சிலர் கருதுகின்றனர். உதாரணமாய் "சண்டை செய்தல்" என்ற சுபாவ உணர்ச்சி எல்லாரிடத்திலும் காணப்படும் சுபாவ உணர்ச்சி. நாகரீக வாழ்க்கையில் "சண்டை-செய்வது" என்ற உணர்ச்சிக்கு இடமில்லை. இந்தச் சுபாவ உணர்ச்சி விளையாட்டில் பரிசுத்தப்படுத்தப்பட்டு கௌரவிக்கப்படுகின்றது. நாம் விளையாடும்போது சண்டையில் ஈடுபட்டிருக்கின்றோம். ஆனால் இப்படி ஈடுபட்டிருக்கும் சண்டையில் ஒருவர் இரத்தத்தை நாம் சிந்தப்பண்ணுவதில்லை. இப்போது சொன்ன நான்கு கொள்கைகள் ஒவ்வொன்றிலும் கொஞ்சம் உண்மையிருப்பதால், இவைகள் எல்லாம் உபயோகமானவை.

ஆகவே கல்வி கற்றுக்கொடுக்கும்போது, விளையாட்டை ஒரு முக்கிய சாதனமாகக் கையாளவேண்டும். இப்படிச் சொல்லும்போது "எல்லாம் விளையாட்டு, முக்கிய வேலை வேண்டாம்" என்று அர்த்தமில்லை. பிற்காலத்திற்கு உதவக்கூடிய விஷயங்களைக் கற்றுக்கொடுக்கவேண்டியதுதான்; ஆனால் இவ்விஷயங்களை, பிள்ளைகள் விரும்பும் விதமாய், விளையாட்டு முறையில் சொல்லிக்கொடுக்கவேண்டும். கணக்கு, பூகோளம், சரித்திரம், சிவிக்ஸ், பாஷை, முதலிய பாடங்களையெல்லாம் விளையாட்டு முறையில் சொல்லிக்கொடுப்போமானால், சிறு மாணவர்கள் அதனால் பெரும் பயனை அடைவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

முதியோர் கல்வி (Adult Education)

மானிடரின் நாகரீகம் ஒழுக்கம் இவற்றை விருத்தி செய்யவும், காப்பாற்றவும் அடிப்படையானது கல்வியே ஆகும். கல்விக்குக் கரையில்லை. முதியோர் கல்வி கற்கவேண்டிய விதம், அதன் பலன், அதன் வகை எவை என்பதையும், நம் நாட்டிலும் அந்நியநாடுகளிலும் அது எவ்வாறு முன்னேற்றமடைந்துவருகிறதென்றும் சீர்தூக்கிப் பார்ப்போம்.

தற்காலத்தில் நாம் காண்பது யாதெனில் பிள்ளையானது நடக்கவும் பேசவும் சக்தியடைந்தவுடன் அதாவது நான்கு அல்லது ஐந்து வயதிலேயே பாடசாலைகளுக்குப் பெற்றோர்கள் அனுப்பி விடுகின்றனர். அவர்களும் முயற்சி எடுத்து ஆரம்பக் கல்வி உயர்தரக் கல்வி இவற்றைக் கற்றுத் தேறுகின்றனர்.

இந்தியாவிலே ஆரம்பப் பாடசாலைகளும், உயர்தரப் பாடசாலைகளும் அதிகரித்து கல்வி கொஞ்சம் விருத்தியடைந்து வந்தாலும் அந்நிய நாடுகளைப்போல் கல்வி நம் நாட்டிலும் அவ்வளவாக விருத்தியடையவில்லை. நூற்றுக்கு எழு பேர்தான் இந்தியாவில் ஆரம்பக் கல்வி கற்றவர்களாயிருக்கின்றனர்.

நமது நோக்கம் முதியோர் கல்வியை எவ்வாறு முன்னேற்றமடையச் செய்யவேண்டுமென்பதே. நமது இந்திய நாட்டிற்கு முதியோர் கல்வி தேவை என்று சொல்லும்போது, பாஷை, கணிதம், பொதுஅறிவு பாடங்கள் இவற்றைக் கற்பது மாத்திரம் ஆகாது. அந்தந்த இடங்களில் ஜனங்கள் கையாளும் கைத்தொழில்களையொட்டியும் சுகமே ஜீவிக்கவேண்டிய வழி வகைகளைப்பற்றியும் போதிப்பதாகும்.

விவசாயிகள் எவ்விதம் நவீன முறைப்படி எருக்களைப் போட்டு நிலத்தைப் பண்படுத்தித் தங்கள் ஊதியத்தை அதிகரிக்கலாமென்றும், தங்களுக்கு வேண்டிய பணத்தை அநியாய வட்டிக்கு வாங்காமல் சொற்ப வட்டிக்கு எவ்விதம் யாரிடமிருந்து பெறவேண்டுமென்றும், பின் வருஷ முடிவில் எங்ஙனம் அக்கடனை திருப்பிக் கொடுக்கலாமென்றும் அவர்கள் தெளிவாய் உணரும்படி செய்யவேண்டும்.

சாதாரண சுகாதார முறைகளை அறியாததினால் கிராமங்களில் வருடந்தோறும் உயிர் துறப்போர் அனந்தம்பேர். எவ்விதம் சுத்தமாயிருக்கவேண்டுமென்றும், காற்றோட்டமுள்ள இடங்களிலும் வீடுகளிலும் வசித்து, சுத்தமானதும் புதிதானதுமான ஆகாரப் பொருட்களைப் புசித்து, நாடோறும் நீராடி, சுற்றுப்புறங்களைச் சுத்தமாய் வைத்து எவ்வாறு காலரா, அம்மை, முதலிய வியாதிகள் வராமல் தடுக்கலாமென்றும் அவர்கள் தெரிந்திருக்கவேண்டும்.

இன்னும் தங்கள் பிள்ளைகளுக்கு ஆகாரமும், ஆடையும் கொடுத்து அவர்களை வளர்த்து விட்டால் போதுமா, அவர்கள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் வளர்ந்து வருகிறார்களா என்பதை சற்றும் கவனிக்காத பெற்றோர்க்குப் புத்தி புகட்டுவது பெரிய உபகாரமாகும்.

கல்வியறிவில்லாதவன் நன்றாய் வளர்ந்த மரத்துக்குச் சமமாவான். கல்வியைக் கற்றறியாதவர்கள் தங்கள் ஜீவிய காலத்தில் எக்கமுற்று ஜன சமூகத்துக்கும் தங்களுக்கும் யாதொரு மா பெரிய செயலையும் இயற்ற இயலாதவர்களாகிறார்கள்.

இனிமேலாக முதியோர் கல்வியை விருத்தி செய்வதெப்படி என்பதைப் பார்ப்போம். இராப் பள்ளிக்கூடங்கள் மூலமாய்த் தான் இவ்வேலையைச் செவ்வனே, கிராமப் பாடசாலையின் ஆசிரியர்கள் செய்து முடிக்க இயலும். எளிய சொற்பொழிவுகளின் மூலமாயும், தாங்களே செய்து காண்பித்தும் உற்சாகப்படுத்தி, கிராம முன்னேற்றத்துக்கு வெகுவாய் உதவி புரியலாம். இன்னும் கிராமவாசிகளுக்கு வேண்டும் பணஉதவி செய்ய கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்படவேண்டும். ஆடுமாடுகளை வளர்க்கவும் அவற்றைப் போஷிக்கவும் வேண்டிய சாதாரண முறைகளை அறிவித்தல் வேண்டும். தேனீ வளர்த்தல், கோழிப்பண்ணைகள் வைத்தல், நெசவுத்தொழில் முதலியவற்றை கிராமவாசிகள் சொற்ப செலவில் செய்து ஏராளமான ஊதியமும், ஊக்கமும் அடையலாம். இவ்வாறு செய்யுங்கால் வீண்காலம் போக்கவும் அவர்களுக்கு அவகாசம் கிடைப்பதரிது.

அந்நிய நாடுகளில் முதியோர் கல்வி எவ்விதம் போற்றி ஆதரிக்கப்பட்டுவருகின்றது என்று ஆராய்ந்துபார்ப்போம். மேல் நாடுகளில் பலகலைகளிலும் தேர்ந்த மகான்கள் சில காலங்களில் ஒன்றுகூடி பற்பல விஷயங்களைப்பற்றி சொற்பொழிவுகள் ஆற்றி தங்கள் கல்வியை இன்னும் அதிகமாக விருத்திசெய்கின்றனர். ஆனால் நம் நாட்டில் கல்வி அறிவு இல்லாதவர்களுக்கு அவர்கள் தொழில் சம்பந்தமானதும், வாழ்க்கை சம்பந்தமானதுமான அறிவை உபந்நியாசங்கள் மூலம் அபிவிருத்தியடையச் செய்வதே முதியோர் கல்வி என்பதின் பொருளாகும். மேல்நாடுகளில், தேசம், கைத்தொழில், வியாபாரம், நூதன விஷயங்கள் சாமான்கள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கானவைகளைப்பற்றி அவர்கள் பேசுகின்றனர்.

நம் நாட்டிலோ கிராமவாசிகளுக்கு வசதியான காரியங்களிலேயே முதியோர் கல்வியை விருத்திசெய்ய வழியுண்டு. காலக்

கிரமப்பிரகாரம் நடத்தமுடியாது. எனவே நாகரீகத்திலும் தேசம் செழிப்புறுதல், சிறந்த மகான்கள் தோன்றுதல் இவற்றிற்குக் காரணமாயிருப்பது கல்வியாதலால் சிறுவர்மட்டுமன்று, கற்றறியாத பெரியோர் (முதியோர்) களுக்கும் அதன் வாசனையை ஊட்டுவது நம் ஒவ்வொருவரினுடையவும் கடமையும், நாம் நமது தேசத்துக்குச் செய்யும் சிறந்ததுமான சேவையுமாகும்.

சுகாதாரம்

(M. Govindaswami alias Susai Arpudam, *H. G.*)

பாரவே இன்னமொன்று பகரக்கேளும்
பாங்கான புளவை தீர மருந்தைக் கேளும்
பாரினில் முளைத்திட்ட மூலிகையே யாகும்
பாரினில் மெலியார் பார்த்திடவே செய்திடும்
பாரினில் குணர்ந்திட்டேன் கணக்காயன் அற்புதம்.

புளவைக்கட்டிக்கு ஓர் சிகிச்சை முறை

ஆளிவிதை; ஊமத்தை இலைச்சார்; பச்சரிசி மாவு; மஞ்சள் பொடி; வளப்பு எண்ணெய்; அடுப்புக்கரி; கற்றாளைச் சோறு.

அளவு :—ஆளிவிதை (கால் பலம்) 2 வீசை.

வைத்தியஅளவு :—விராகன், அரைத்துட்டிடை.

($\frac{3}{8}$) களஞ்சு, காலயரைக்கால் துட்டிடை.

முறை :—மேற்கூறிய மருந்துகளை சேகரம்செய்துகொண்டு வந்து சுத்தமான கருங்கல்வத்தில் ஆளிவிதை, அடுப்புக்கரி, ஊமத்தை இலைச் சார் இம்மூன்றையும் முதலில் அறைத்துக்கொண்டு பின் கற்றாளைச் சோறு வைத்து அறைக்கவும். பின் மஞ்சள் பொடியையும் பச்சரிசி மாவையும் எண்ணெயையும் சிறிது சிறிது சேர்த்துக்கொண்டே கூடியமட்டும் அறைத்து வழித்து பழகிய மண் ஓட்டில் வைத்து அடுப்பில் ஏற்றி சிறிது சூடுண்டாக்கிக்கொண்டு சிரட்டையில் எடுத்துக்கொள்ளவும். சுத்தமான மெல்லிய துணியில் துவாரம்செய்து களிம்பு தடவி போட்டுவர ஒரு வாரத்தில் குணமாகும்.

வியாதியுள்ளவர் அனுசரிக்கவேண்டிய ஒழுங்கு :—புண்ணுண்டால்—புண்ணில், ஈக்கள், கொசுக்கள், பத்துக்காப்பூச்சி, எலி இவைகள் கடிக்காமல் கவனித்துக்கொள்ளவேண்டும்.

பாடக் குறிப்பு

(கொத்து 31, மலர் 9, பக்கம் 262-ன் தொடர்ச்சி.)

(G. K. M. Louis.)

பாடம் : கணக்கு. பாகம் : 6 என்னும் எண்.

நேரம் : 30 நிமிஷம். வகுப்பு : I.

நோக்கம் :—6 என்ற எண்ணின் சேர்க்கைகளைப் பற்றிப் போதித்தல்.

உபகரணம் :—எண் படங்கள், எண் எழுதிய அட்டைகள், குச்சிகள், விதைகள், சோழிகள், க்யூப் (Cubes), வளையல்கள், கோலிகள், கண்ணாடிப் பாசிகள், மணிச்சட்டம்.

பீடிகை :—(1) ஒரு குவியலிலிருந்து 6 பொருள்களை எண்ணி எடுக்கச் செய்தல்.

(2) பல எண்கள் கலந்த குவியலிலிருந்து 6 எழுதிய அட்டையைத் தனியே எடுக்கச்செய்தல்.

(3) க. ப. வில் 6 என்னும் எண்ணை எழுதச்செய்தல்.

(4) 2 பொருள்களுடன் எத்தனை பொருள்களைச் சேர்த்தால் 5 பொருள்களாகும் ?

(5) 5 பொருள்களிலிருந்து 1 பொருளை எடுத்து விட்டால் மீதி எத்தனை ?

இவ்வாறு, உள்ள பொருள்களைக் கையாடி சில அப்பியாசங்கள் தரவும். பின் மேற்கண்ட நோக்கத்தை வெளியிடவும்.

விஷயம்	முறை
6-ன் சேர்க்கைகள். 1. $5+1=6$; $1+5=6$ $6-1=5$; $6-5=1$	உபாத்தியாயர் 5 சோழிகளை அடுக்கி, பக்கத்தில் ஒரு சோழியை வைக்கவும். பிள்ளைகளையும் அவ்வாறு அடுக்கிவைக்கச்செய்யவும். பின் 5 சோழிகளையும் 1 சோழியையும் சேர்த்து எண்ணி 6 சோழிகள் என்று சொல்லி, பிள்ளைகளையும் சொல்லச்செய்யவும். பின் 1 சோழியும் 5 சோழிகளும் சேர்ந்து 6 சோழிகள் என்றும் சொல்லச்செய்து க. ப..வில் எழுதவும். பின் உபா. 6 கோலிகளில் 1 கோலியை சூசைக்குக் கொடுத்துவிட்டு மீதியை எண்ணச்செய்து 5 கோலிகள் என்றும், 6 கோலிகளில் 5 கோலிகளை ஜானுக்குக் கொடுத்துவிட்டால் மீதி 1 கோலி என்றும் வருவித்து க. ப. வில் எழுதிக் காட்டவும்.
2. $4+2=6$; $2+2+2=6$ $6-2=4$; $6-4=2$	மேற்கூறியவிதமே மற்றச் சேர்க்கைகளையும் உபகரணங்களை உபயோகித்துப் போதிக்கவும்.
3. $3+3=6$ 6-ல் பாதி 3 ; $6\div2=3$ 2 தடவை $3=6$; $3\times2=6$ 3 தடவை $2=6$; $2\times3=6$	உபா. இருவருக்கு 3 பாசிகள் வீதம் கொடுத்து 2 தடவை மூன்று ஆறு என்றும், மூவருக்கு 2 கோலிகள் வீதம் கொடுத்து மூன்று தடவை இரண்டு ஆறு என்றும் வருவித்து க. ப. வில் எழுதவும். 6 வளையல்களை இரு கைகளில் அணிந்தால் ஒரு கையில் அணிவது 3 வளையல்கள் என்றும், 6-ல் பாதி மூன்று என்றும், இது

விஷயம்	முறை
	போன்ற பலவிதப் பொருள்களைக் காட்டி மூன்றிரண்டு ஆறு, இரண்டு மூன்று ஆறு என வருவித்தல். இவ்விதமே மற்றச் சேர்க்கைகளையும் போதிக்கவும். ÷, × அடையாளங்களைப் பற்றிய வியாக்கியானம் பிள்ளைகளுக்கு இவ்வகுப்பில் அவ்வளவு அவசியம் இல்லை. பெருக்கல் வகுத்தல் முறைகளைப்பற்றிய ஞானம் ஏற்படும்படி செய்வதே நமது நோக்கமாய் இருக்கவேண்டும்.

அப்பியாசங்கள்

1. ஒரு பெஞ்சியில் 4 பிள்ளைகளும், மற்றொரு பெஞ்சியில் 2 பிள்ளைகளும் உட்கார்ந்தால், மொத்தம் எத்தனை பேர்?

2. உனக்கு இப்போது வயது 6. உன் தம்பிக்கு வயது 4. உன் தம்பியைவிட உனக்கு எத்தனை வயது அதிகம்?

3. ஒரு கோலின் நீளம் 6 அடி. அதில் 3 அடி நீளத்தை வெட்டிவிட்டால், மீதியிருப்பதின் நீளம் என்ன?

4. ஒரு கூறில் 3 கத்தரிக்காய்கள் வீதம் 2 கூறுகளில் எவ்வளவு?

5. ஆறு மாம்பழங்களை 3 சகோதரர்கள் சரிபங்கிட்டால், ஒவ்வொருவனுக்கும் கிடைப்பது எத்தனை?

க. ப. சு.

$5+1=6$; $1+5=6$; $6-1=5$; $6-5=1$

$4+2=6$; $2+4=6$; $6-2=4$; $6-4=2$

$3+3=6$; $6-3=3$;

கிராமாந்தரப் பாடல்கள் or சமுதாயப் பாட்டுகள்

(Folk Songs)

தற்காலப் படிப்பாளிகள் தங்களை என்னவோ தனிப் பிறவிகளென்று கிராம சம்பந்தமேதுமின்றி யிருக்கின்றனர். நவீன பட்டணங்களும் நடுகாட்டில் செந்தாமரை பூத்தாற்போல் தன்னந்தனிமையாகவேயிருக்கின்றன. ஏழ்மையில் முழுகி, அறிவின்மையில் ஒளி மழுங்கிக்கிடந்தாலும் இந்தியாவின் செல்வாக்குக்கும், நன்மைகட்கும் அடிப்படையாவன கிராமங்களே. அவற்றின் நிதியே இந்தியாவின் நிதி; அவற்றின் விதியே இந்தியாவின் விதி. சுருங்கக்கூறின் அரசாங்கத்தில் செல்வாக்குக்கு ஆதிமூலமானவை அவைகளே. 'குடி உயர முடி உயரும்' என ஒளவையாரும்;

வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயல்முன்
பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்;
பொங்கோதை கடல்தானை போர்வேந்தர் நடத்துபெரும்
செங்கோலை நடத்துங்கோல் ஏறடிக்கும் சிறுகோலே!

எனக் கம்பரும் கூறியது எத்தனை உண்மையானது!

அறிவிலிகளாயிருப்பினும் கிராமத்தாருக்கு அவர்கட்கேற்ற பாடல்களுங் கீதங்களுமுண்டு. நாகரீக மணம் இல்லாதிருப்பினும், நாவலர்மயம் அங்கு பொலிவுடன் விளங்குகின்றது. நகரவாசிகளைப்போலவே அவர்களுக்கும் பாக்கள், சங்கீதங்கள் முதலியனவற்றில் மாற்றொணு விருப்பம். அவர்களறியும் பல்லவிகள் கிராம வாழ்வின் சிறப்பையும், அவண்வதியும் காட்சிகளையும், ஆங்குள்ளோர் தம் மனோநிலை, பழக்கவழக்கங்கள் ஏனையவற்றையும் எளிய இனிய பாஷை நடையில் எடுத்துக்காட்டுகின்றன. இப்பாடல்களில் சொல்லும் பொருளும் இலக்கண முறைப்படியமைந்திருப்பதோடு யாப்பிலக்கணம், அணியிலக்கணமுங்கூடச் சிறிதும் பிழைபடாது இயற்கையாகவே அமையப்பெற்றிருக்கிறது. மதலைகளைத் தாலாட்டும் மாண்புறு கீதங்களும், காதலரைக் களிப்பிக்கும் பல்லவிகளும், தம்பதிகளை வாழ்த்தும் மங்கள வாழ்த்துக்களும், நீதிநெறியுரைக்கும் பாக்களும், இறந்தார்க்காகப் புலம்பும் சரமகவிகளும், புராதனவீரர், புண்ணியர்களின் சரிதங்களும், அரியதத்துவங்களுடனும், கற்பனைகளுடனும் செறியப்பெற்றிருக்கின்றன. எத்தனை கம்பர்கள் கால்நடையாக ஊருக்கு ஊர் செல்லுகின்றனர்! எத்தனை ஒளவையார்

கள் கிராமங்களிலேயே வாணுட்களைக் கழித்துப் பிறர் யாருமறியாமல் பரமபதமடைகின்றனர்.

‘ கள்ளி வயிற்றில் அகில்பிறக்கும் மான் வயிற்றில்
ஒள்ளரிதாரம் பிறக்கும் – ஆழ்கடலில்
பல்விலைய முத்தம் பிறக்கும்.’

ஆனல் கிராமங்களில் மறைந்துகிடக்கும் இக்கவிகளை யறிவார் யார்?

தற்கால விவேகிகள் இவற்றைக்கேட்டலும் கௌரவ பங்கமென்று எண்ணும் இக்கிராமப்பாட்டுகளிலேயே கலியுக மகா கவி ஸ்ரீ ரவீந்திரநாத தாக்கூர் உலகம் புகழும் தம் அருங் கவிகட்கு முதல் அறிவைக்கண்டார். ஐக்கிய மாகாணங்களிலுள்ள கிராமத்தார் பாடலிலிருந்தே மகா வித்துவான் துளசி தாஸ் இந்தி பாஷையின் செய்யுள் முறையைக் கண்டுபிடித்தார். பெண்கள் குழாம் பாடிக்களிக்கும் பழங்கதைகளிலிருந்தே ஆங்கில நாவலர் **ஷேக்ஸ்பியர்** “ ஹாம்லெத் ” கதையைக் கண்டார். உய்த்துணரின், ஆலுக்கு விதைபோலும், ஆற்றுக்கு மழைபோலும், விவேகிகள் மேதாவிகளனைவருக்கும் இலக்கிய விலக்கண, தத்துவ, கற்பனுசக்தியை முதன் முதல் உட்புகுத்துவன கிராமப்பாடல்களேயாம். எனவே, ஓர் பாஷையின் அபிவிருத்தி அதன் இலக்கிய விலக்கண நூற்களையேயன்றி இக் கிராமப்பாடல்களையே வித்தாகவும் மூலமாகவும் கொண்டுளது.

மேற்கூறியவற்றிற்குச் சான்றுகச் சில கிராமப்பாட்டுகளை இங்குக் கூறுவாம்.

திருநெல்வேலி ஜில்லாப் பெண்கள் தங்கள் குழந்தைகளைத் தொட்டிலிலிட்டுப் பாடும் தாலாட்டு இது :—

மேகத்தைக்கீறி வெளிக்கு வந்த சூரியன்போல்—என்
தாகத்தைத் தீர்க்கவந்த தவப்பொருளும் நீதானே.
எங்கள் குலம்மங்காமல் இறையரசு நந்தாமல்
தங்கமணிச் செங்கோலில் தனித்தாள வந்த கண்ணே.

நோய் நீங்கிச் சுகமாகி வந்த மகன் இறந்தது கண்டு தாய் புலம்பல் :—

எண்ணி எண்ணிச் செய்த தவம் இன்று வந்ததென்றிருந்
[தேன்
கண்மணியைக் கற்பகத்தைக் காலனுக்கோ சம்மதித்தேன்.

182453

மகா வீரன் சந்தனத்தேவரை நீதிதலத்தில் நீதிபதி உசாவியதைக்கூறும் தெம்மாங்கு :—

தூக்குமேடை ஓரத்திலே, வாக்குமூலம் கேட்கையிலே
வாக்குமூலம் வேண்டாமையா, தூக்கிடுங்கள் சந்தனத்தை.

பாமர ஜனங்களின் கவலையிலாறுதலும், உழைப்பில் உற்சாகமும், அறிவின்மையில் அறிவும் அளிப்பன இக்கிராமப் பாடல்களே. ஒவ்வொரு தேசமும் அவ்வவற்றின் கிராமப் பாடல்களை அச்சிலிட்டு அழியாவண்ணம் காத்திருக்க, நம் தமிழ் நாடோ கவலையின்றியிருந்ததால் அவை சீர்குன்றிச் சிதைந்தன. தமிழ்மொழியை வளர்க்கும் தாதாக்கள் அதற்கு வித்தாகும் இவற்றையும் விருத்திசெய்தல் கடன். புராதனக் கிராமப்பாடல்களனைத்தும் அழியாதிருப்பின் தமிழ்மொழியின் வளர்ச்சி எத்தனை மாட்சியுடைத்தாயிருக்கும்! அத்தகைய நாளை நம் தமிழ்த்தாய் என்று காண்பாளோ!

இத்தகைய பாடல்கள் பலவுள. நம் வாசக நேயர்கள் அவற்றைத் தேடி, நம் பூங்கொத்தின் மூலமாக பகிரங்கப்படுத்தி, அனைவரையும் மகிழ்விப்பார்களா?

யோசனைக்கணக்கு

ஒருவன் கூடை நிறைய முட்டைகளை எடுத்துக்கொண்டு சந்தைக்கு வேகமாய்ப் போகும்வழியில் ஒரு சைக்கிளில் மோதிக்கொண்டதால் கூடை கீழேவிழ, முட்டைகளெல்லாம் உடைந்து போயின. அதில் எத்தனை முட்டைகள் இருந்தனவென்று கேட்டதற்கு அவன் கூறிய பதில் பின்வருமாறு :—

இரண்டு இரண்டாக வைத்தால் ஒன்று மீதமாகும். மூன்று மூன்றாக வைத்தால் இரண்டு மீதமாகும், நான்கு நான்காக வைத்தால் மூன்று மீதமாகும். ஐந்து ஐந்தாக வைத்தால் நான்கு மீதமாகும். ஆறு ஆறாக வைத்தால் ஐந்து மீதியாகும். ஏழு ஏழாக வைத்தால் சரியாய்ப் போய்விடும். அக்கூடையிலிருந்த முட்டைகள் எத்தனை?

மற்றவர்கள் எங்கே?

(G. Susaimanickam, H. M.)

முன்பனிக்குப்பின், பின்பனிகாலமும் முற்றி இளவேனிற் காலம் வந்தடைந்தது. தருக்கள் எல்லாம் தத்தம் முதிர்ந்து பழுத்த இலைகளை யுதிர்த்துவிட்டு, புதிதாய்த் தளிர்த்துக் கண் ணுக்கு ரம்மியமான காட்சியையளித்தன. புள்ளினங்களும் காச்சு மூச்சென்று கத்தித் தம் ஆநந்தத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. இரவிலோ கோகிலங்கள் இனிய குரலெடுத்து இன்னிசை பாடும்; பகலெல்லாம் சுட்டுப்பொசுக்கும் வெய்யில், இரவில் தண்கதிரோன் வரவால் குளிர்ந்துவிடும். இத்தகைய ஓர் நாளில் எனது மேஜையில் கிடந்த "**போதன விஷயப் பூங் கோத்தை**" சிறிது நோக்கினேன்.

அவ்வளவுதான். ஓர் அரிய ஆலோசனையை என் தாய் என் மனத்தில் புகுத்தினள். அந்தப் புத்தி எதுவென்றால்:—அது தான்; "**மற்றவர்கள் எங்கே?**" என்று ஓர் கட்டுரை எழுத வேண்டும் என்பதே.

"**தாயுரை கடந்தோன் மாதுயரடைவான்**", "**தாய் சோல் துறந்தால் வாசகமில்லை**" என்னும் நீதி வாக்கியங் களை நினைத்தே யான் இக்கட்டுரையை எழுதத் துணிந்தனன். இக்கட்டுரை வெளிவந்தவுடன் என் உழைப்பின் பலன் கிட்டும் என்றும் நம்புகிறேன்.

"**தந்தை தாய்ப் பேண்**" என்னும் இந்நீதி தரணியில் தாண்டவமாடும் சேதி அறியாதவர் ஒருவருமிலர். அதன் கருத்தை அறிந்தவரும் பலர். நம்மைப் பத்துமாதம் கர்ப்பத்தில் சுமந்து பெற்ற தாயை நாம் கவனித்து அன்ன வஸ்திரம் முதலிய வைகளைக் கொடுக்காவிட்டால் அன்னவளது மனம் எவ்வாறிருக் குமென்று வாசகர்களே ஒருவாறு யூகித்து அறிந்துகொள்ளுங் கள். அறிந்தும் நிவர்த்தி பண்ணுங்கள்.

அஃதேபோல் நம் தாயாம் தாய்ப் பாடசாலையும், தன்னிட மிருந்து ஞானப்பிறப்பையடைந்த ஞானமக்கள் தம்மைக் கவனி யாது, அன்னவஸ்திரமாகிய, சந்தா, விஷயதானம் புரியாத ஆரம்ப ஆசிரியர்களை நினைத்து மனமொடிந்து வாடுகின்றாள் என்றால் மிகையாகாது.

இரண்டு மூன்று மக்களை ஈன்ற தாய்க்கு கனிஷ்ட புதல்வன் மாத்திரம் உதவி செய்துவந்தால், மற்ற இரண்டு சிரேஷ்ட புதல்வர்களை எங்கே என்று கேட்பாளல்லோ அத்தாய்! வேண்டும் வேண்டாம் கேட்டே தீர்வாள். மேற்கூறிய தன்மைபோல், 1907-ம் வருடத்திலிருந்து நம் நல்ல தாயாம் திருக்குடும்பப் போதனுமுறைப் பாடசாலையில் வந்து அநேக சாஸ்திரங்களையும், ஞான நன்மைகளையும் அடைந்துபோன சிரேஷ்ட மக்கள் அந்நாளிலிருந்து இந்நாள்மட்டும் தாயைக் கவனியாதிருப்பது மிச்சம் விசனிக்கத்தக்கதே!

1907-ம் வருடத்திலிருந்து இற்றை வரைக்கும் கல்வி பயின்று வெளியே சென்ற சிரேஷ்ட பழைய மாணவர்களின் தொகை ஏராளம். இத்துணையில் எத்தனைபேர் சந்தாதார்? எத்துணைபேர் விஷயதானம் புரிவோர்? அந்தோ! ஒரு சிலரே. நூற்றுக்கணக்கான மக்களில் ஒரு சிலரே சந்தாதாராகவும் விஷயதானம் புரியவுமிருந்தால், நம் தாய், **மற்றவர்கள் எங்கே?** என்று கேட்பது நியாயந்தானே!

ஆகையால் அன்பார்ந்த பழைய புதிய ஆரம்ப ஆசிரியர்களே! ஆசிரிய மாணவர்களே!! பூங்கொத்து நேயர்களே!!! வாசகர்களே!!!! நம் தாய்க்காக நாம் பெரிய தியாகம் செய்யவேண்டியதில்லை. நாமும் காலாகாலத்தில் சந்தாதாராய்ச் சேர்வது மாத்திரமல்லாமல் மற்றவர்களையும் சேர்த்து விஷயதானம் புரியச் செய்யும்படி தூண்டப் பிரயாசப்படுவோமாக. இன்னும் அநேக காரியங்களை இடம் போதாமையால் நிறுத்திக்கொண்டேன். மேற்சொன்ன இரண்டு காரியங்களையும் நாம் நமது தாய்ப் பாடசாலைக்குச் செய்து, தாய்ப் பாடசாலையும், நாமும், நமது தேயமும் நலந்தூய்ந்து இனிது வாழ்வோமாக.

தாய்ப்பாடசாலையும், போதனு விஷயப் பூங்கொத்தும், தலைமை ஆசிரியரவர்களும், உதவி ஆசிரியர்களும், அம்பரன் ஆசீர் பெற்று பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

உபாத்தியாயர்: அடே! ஒன்றில் கால்போனுல் எவ்வளவுடா?

பையன்: (யோசித்து) நொண்டி சார்.

"அரணைப்புத்தி"

என் கதை

A. R. Natarajan

இதுதான் என் பெயர். இந்தப் பெயர் எனக்கு ஏன் வந்தது என்று கேட்கின்றீர்கள். சிறிது சாவதானமாகவும் பொறுமையுடனும் இதை வாசித்தால் எனக்கு இப்பெயர் வந்த காரணமும், எனது அரிய செயலும் நன்கு விளங்கும்.

"நான் ஏதாகிலும் ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென எண்ணிச் செய்யச் செல்வேனும்; ஆனால் இந்த பாழாப்போன புத்தி, காரியம் முடியும் சமயத்தில் அரணையைப்போல் மறந்து போய்விடுமாம். அதனால்தான் எனக்கு இந்த அருமைப் பெயர் வைக்கப்பட்டது" என்று என் தந்தை எனக்கு ஞாபகப்படுத்துவார். இவ்வாறு என்னுடைய "நாமம்," (பெயர்) சிறப்பாக விளங்கியது.

இனி என் அருமைச் செயல். என் தந்தை மிகவும் பெருத்த லௌகிகர். ஆதலால் அவருக்கு "அமாவாசை என்றையத்தினம்" என்பது சரியாகத் தெரியாது. எனினும், அப்பொழுதுவரும் அமாவாசை தினத்தை அறிவதன்பொருட்டு அருமைப் பிள்ளையான என்னை புரோகிதரிடம் தூதுவிட்டார். புரோகிதருடைய வீடோ எங்கள் ஊரிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் இருக்கின்றது. இதனிடையில் ஒரு நதி, ஒரு சிறிய ஊர், ஓர் சோலை ஆகிய இவைகள் நடுவழியே உள. கடத்தற்கரிய இப்பெரும் வழியைக் கடந்துசென்று புரோகிதரிடம் அமாவாசை தினத்தைக் கேட்டுக்கொண்டு வரப்போகும் பொழுது "என்று அமாவாசை" என்றும், வரும்பொழுது அவர் சொல்லுவதையும் உருப்போட்டுக்கொண்டே வரும்படியும் என் தந்தை எனக்கு ஆணையிட்டார். நானும் அப்படியே நல்ல லக்னத்தில் வீட்டைவிட்டுப் புறப்பட்டு தந்தை சொன்னதை மனனம் செய்துகொண்டே புரோகிதரின் வீட்டை அடைந்தேன். பிறகு, அவர் வந்ததும் "என்று அமாவாசை" என்றேன். அவர் "இன்னும் ஏழு அல்லது எட்டு நாட்கள் ஆகும்" என்று சொன்னார். உடனே நான் என் தந்தை சொற்படி அவர் கூறியதை உருப்போட்டுக்கொண்டே வந்தேன். வரும் வழியில் நான் முன் சொன்ன சோலையில் கிளிகளை வேட்டை

யாடும் ஒரு வேடன் இருந்தான். அவனிடம் அச்சோலையிலிருந்த கிளிகளில் ஒன்றைத்தவிர மற்ற கிளிகள் யாவும் அவன் கையில் சிக்கிக்கொண்டன. அந்த ஒரே கிளியே இவன் காட்டும் பாய்ச்சல்களுக்கு வந்தாலும், இவன் பிடிக்கும் சமயத்தில் பறந்து சென்று இவனை ஏமாற்றி வந்தது. இதனால் கோபங்கொண்ட அந்த வேடன் "எப்படியாவது இன்றையத்தினம் இதைப் பிடித்துவிடவேண்டும்" என்ச் சபதமிட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில், அடியேன் "இன்னும் ஏழெட்டு நாளாகும்" என்பதை ஜபித்துக்கொண்டே சென்றேன். இந்த ஜபம் அவன் காதில் பட்டதும் என் காது செவிடாய்விட்டது. அப்படி அறைந்தான். அவ்வறைகளை வரவேற்றுக்கொண்டு என்ன கூறுவதென வினவினேன். அவன் "கண்ணி வைத்தல், வலை வீசல், கட்டல், கொண்டுபோதல்" என்பதை உபதேசித்தான். நான் இதை ஜபித்துக்கொண்டே வந்து அதனருகிலுள்ள ஊரை அடைந்தேன். அங்கு ஒரு வீட்டில் ஒரு மகனும் மகளும் இறக்கும் தறுவாயில் இருந்தனர். அவ்வீட்டிலுள்ளவர் இவ்வாறு கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் "கண்ணி வைத்தல், வலை வீசுதல், கட்டல், கொண்டுபோதல்" என்பதை உச்சரித்தேன். உடனே உதைகளும் பெற்றேன்.

பின்பு அவர்கள் "அருமந்த பெண்ணிற்கும் பிள்ளைக்கும் இப்படி வந்ததே" என உபதேசித்தார்கள். அதைச் சொல்லிக்கொண்டே ஒரு விவாகம் நடக்கும் வீட்டை அடைந்தேன். அங்கு மணமகனும் மணமகளும் வீற்றிருந்தனர். அப்பொழுது இந்த மந்திரத்தை உச்சரித்தேன், உதையும்பட்டேன். பின்பு, அவர்கள் "கல்யாண சம்பிரமம், கனக சம்பிரமம்" என்று சொல்லிக்கொடுத்தனர். அதை உச்சரித்துக்கொண்டே போகும் பொழுது ஒரு வீடு தீப்பற்றி எரிவதையும், அதை எல்லோரும் சிரமப்பட்டு அணைப்பதையும் நான் கவனிக்கவில்லை. அவர்களடியையும்பட்டேன்.

அவர்கள் "தண்ணீரை ஊற்றுவது, தடியால் அடிப்பது" என்று சொல்லித் தந்தார்கள். அங்கு ஒரு குயவன் தன் மகனுக்குத் தன் குலத்தொழில் கற்பிக்க ஆரம்பித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் மகன் "எப்படிச் செய்வது, ஐயா!" என்று தன் தந்தையைக் கேட்டுக்கொண்டிருந்தான். நானும் "தண்ணீரை ஊற்றுவது தடியால் அடிப்பது" என்று கூறிக்கொண்டே சென்றேன். இவனிடத்திலும் நான் வழக்கப்

படி தடியாராதனை பெற்றேன். பிறகு அவன் "நன்றாய்த் தெரியட்டும்" எனக் கூறச் சொல்லிச் சென்றான்.

நானும் இதை ஜபித்துக்கொண்டே நதியைக் கடந்து சென்றேன். அங்கு ஸ்நானம் செய்துகொண்டிருந்தவர்களில் ஒருவருடைய பொருள். இழந்துபோயினமையால் அவர் அங்கிருந்தவர்கள் ஒவ்வொருவரையும் "நீங்கள் பார்த்தீர்களா? நீங்கள் பார்த்தீர்களா?" என்று கேட்டுக்கொண்டிருந்தார். அங்கிருந்தவர்கள் "எங்களுக்குத் தெரியாது" என்று சொல்லும் சமயத்தில் என்னுடைய மந்திரமான "நன்றாய்த் தெரியட்டும்" என்பது அவர்கள் காதில் பட்டதும் என்னை நையப்புடைத்து "ஒன்றும் தெரியாது" என்பதையும் உபதேசித்தனர்.

நான் இதை நெட்டுருத் தள்ளிக்கொண்டே வீடு சென்றேன். என் தந்தை "என்றைக்கடா அமாவாசை?" என்று கேட்டார்.

"ஒன்றும் தெரியாது" என்று பதில் சொன்னேன். ஏன்? நான் கெட்டிக்காரன்தானே? என் செயல்கள் எப்படி?

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனும்

நானாவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப் பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	... ரூ.	1—0—0
வெளி நாடு	... ரூ.	1—6—0

விலாசம்:

சூப்பரின்டேண்டு,
செயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,
திருச்சினாப்பள்ளி.

சிறுவர் சம்பாஷணை

(தொடர்ச்சி)

(A. Rayappan.)

(மறுநாள் சாயந்திரம் தோட்டத்தைப் பார்க்கப்போனபொழுது)

சீனி : சார், நேத்து ராஜு பயல் என்னை கடிச்சுபுட்டானே ; அவனை சும்மவிடமாட்டேன்சார். டேய், ராஜு! இருடா உன்னை ஒருகை............

ராஜு : போடா. எப்படா கடிச்சேன் உன்னை? நான் கடிக்கவே இல்லை சும்மா சொல்றான் சார். அளக்கிரியோடா. அப்புரம் பார்த்துக்க.........

முத்து : என்னடா சீனி. நேத்து என்னமோ சொன்னியே ; எங்கடப்பா, ஒங்க கள்ளி? இல்லையாக்கும்.

சீனி : சார். நம்ப இன்னக்கி, தண்ணீர் ஊத்தி கொத்திப் போடலாம். நாளைக்கு நெசம்மா கள்ளி கொண்டாறேன். வேலியும் அடச்சுப்புடலாம்.

ராஜு : தண்ணியா ஊத்தப்போற. எப்டுரு ஊத்துவ; வாளிவேண்டாமோ? பெரிய கிலாஸ் பையன்கதான், வாளின்னு போச்சு, திட்றுங்க. அடிக்க வருகின்றுங்க. லேசுல வாங்கி வந்துடலாம்னு நினைக்கிறுயா—வாளியை?

முத்து : ஆமாங்கசார். நாங்களும் காலம்பறபுடிச்சு கேட்டுக்கேட்டுப்பார்க்றேம். தரமுடியாதுன்னு தலையை ஆட்டிக்கிட்டே இருக்கிறுங்க. எப்படி நாம் தோட்டம் போடறது? நீ வந்துடா சீனி ; ரொம்ப பென்சல் கொண்டா. அவுங்கெல்லாம் நாளைக்கு நம்ப கிலாசுக்கு வருவாங்கலே, பென்சல் கடன் வாங்க. அப்போ பென்சலைக் கொடுத்துவிட்டு வாளியை வாங்கிக்கொள்ளலாம்.

ராஜு : நான் கொண்டாறேண்டா வாளி. எப்படித் தெரியுமா? நாளைக்கு அவுங்க தண்ணி ஊத்திக்கிட்டிருப்பாங்க. மொல்லபோய் பிடுங்கி வந்துடறேன். ஆனு......ல்? அடுச்சுப் புடுவாங்களே. இல்லாடா சீனி. நீயே பெனுசல் ரொம்ப கொண்டா, வாளியை வாங்கிபுடலாம்.

சீனி : முடியாதுரு. எங்கம்மா, தரவேமாட்டங்க. ஒரே ஒரு பென்சல்தான் கிடைக்கும். ஆமா? அவுங்க, வாளியை ஏன் தரக்கூடாது? தண்ணி ஊத்திவிட்டுனலும் கொடுக்கட்டும்.

" அவுங்களுக்கு மாத்திரம்தானு அந்த வாளி சொந்தம். அவுங்கலா, காசுபோட்டு வாங்குனுங்க. நம்ப சாமியாருல்ல எல்லாத்துக்கும் கொடுத்தார்." சார் நீங்க வந்து வாங்கிக்கொடுங்க, நாங்க, எடுத்துக்கொண்டு ஓடியாந்துடுறோம்.

(பிறகு வாளி வாங்கிக்கொடுக்கப்பட, ஆசிரியரின் உதவியால் தண்ணீர் ஊற்றி கொத்தப்பட்டு வேலி அடைக்கவும் விதை போடவும் நிலம் தயாராயிருந்தது.)

ஆசிரியர் : சீனி, நாளைக்கு மறக்காமல் கள்ளி கொண்டு வருவாயா ?

சீனி : நெசம்மா நான் கொண்டாறேன். வேலியும் அடச்சுப்புடலாம் சார்.

ஆசிரியர் : வேலி அடைத்தபிறகு விதை போடவேண்டுமே. யார் விதை கொண்டார முடியும் ?

எல்லாப் பிள்ளைகளும் : நானு சார். சார் நான் ரொம்ப கொண்டாறேன்.

முத்து : நானு கொண்டாறேன் சார். பருப்பு, கடலே, அவரை, மொச்சக்கொட்டை இன்னும் வேனும்னுலும்.........

சீனி : சார், எங்க தோட்டத்திலே பூவா பூத்துருக்குது. விதையும் இருக்கு. என்னுவிதை தெரியுமாடா ராஜு, டெய்சி, பால்சம், கேந்தி, வாடாமல்லி, கோழிக்கொண்டை, இன்னும்...

ராஜு : நான் கொண்டாறேன் பாருடா, பெருசு பெருசா. சார் நான் கொண்டாறேன், கத்தரிக்காய், மாங்காய், முறுங்ககாய், சொறக்காய். இதல்லாம் அப்படியே போட்டா, வெறும் காயா காய்க்குமே, கொளம்புக்கு.

சீனி : (எல்லாரும் சிரிக்க) என்னடா மடையனு இருக்ர. எல்லாக் காயையும் மண்ணிலேபோட்டா, அழுகிபோய்டுமே. அதெல்லாம் போடக்கூடாதுடா. (அடுத்த நாள் பூ விதைகளை சீனி கொண்டுவர, முத்து, அவரை விதை, மொச்சை, மிளகாய் விதை முதலியன கொண்டுவந்து கொடுத்தார்கள்.)

ஆசிரியர் : சரி, இந்த விதைகளை எல்லாம் அப்படியே தோட்டத்தில் முளைக்கவைக்கலாமா ? வேறு எப்படி போடலாம் ? யாருக்கு தெரியும் ?

ராஜு : எனக்குத் தெரியும் சார். நான் சொல்றேன். விதைகளெல்லாம் பெருசும் சின்னதுமாக இருக்குது. அதனுலே,

பெருசுவ ஒன்னும் சின்னதுவ ஒன்னுமா போடலாம் சார். எப்படின்னு? ஒரு மொச்சக்கொட்டையும் இன்னொரு டெய்சி விதைபோடறது. அப்பறம் ஒரு அவரை விதை இன்னொரு பால்சம் இப்படியே போட்ரலாம்சார்.

சீனி: இல்லிங்கசார். எங்க தோட்டத்திலே, ஊட்ல, எப்படின்னு பூ விதைகளை ஒரு பக்கத்திலே பிரிச்சுப்பிரிச்சுப் போட்ருக்ரோம். அவரையை மரத்துக்கடியிலே. ஏன்னு கொடி ஓடும்ல.

முத்து: ஆமாங்க சார். இந்த தோட்டத்திலே பூ விதையைப்போடலாம். மத்த விதையைவேனும்னு, நமக்குத்தான் இடம் இருக்குது. இன்னொரு தோட்டம் போட்டு அதிலே போடலாம் சார்.

ராஜா: ஆமாம். விதை போட்டுட்டா தண்ணி யாருடா ஊத்துரது. நம்பலாலே முடியாது. என்னேது கூப்புடாதே.

சீனி: நான் ஊத்துரேன்சார் முத்தையும் கூட்டிக்கிட்டு. விதையை போடுங்கசார். (விதைப்போட்டு இருபது நாட்களாகவில்லை. செடிகள் நன்றாய் வளர்ந்து பூத்தன.)

சீனி: சார், செடியெல்லாம் பூத்துருக்குசார். வந்துபாருங்க. டெய்சிபூ, பால்சம்பூ கோழிக்கொண்டைதான் அழவா பூத்துருக்கு.

முத்து: நல்லா அழவா இருக்கு சார். அடுத்த வாரத்துக்கு இனுஸ்பெட்டர் வாரூருன்னு சொன்னிங்களே. அவுரு பாத்தா, நம்பதோட்டம் நல்லாருக்குன்னு.

ராஜா: ஆமாங்க சார். நல்லா இருக்கு. ஆனல் என்னமோ பூவிலெல்லாம் உக்காந்ருக்கு, கருப்பும் செகப்பும் கலந்திருக்கு. அது பறக்குது. பாத்தால் குருவிபோல் பறக்குது. என்னை கடுச்சும்புடுச்சு. அதெல்லாம் என்ன?

(தொடரும்)

உபாத்தியாயர் : அடே, நிலையில் உட்காராதே.

பையன் : "நிலையது பிரியேல்" என்று நீங்கள்தான் சொன்னீர்கள் சார்.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

3-3-1941 பழைய மாணவர் தினக் கொண்டாட்டம்:

இன்று மாலை நம் பாடசாலை பழைய மாணவர் சங்க ஆண்டு நிறை விழா ராவ்பகதூர் ஸ்ரீ N. S. குழந்தைஸாமி பிள்ளை (Retired Deputy Director of Agriculture) அவர்களது அக்கிராசனத்தின்கீழ் வெகு குதூகலத்துடன் நடைபெற்றது. இதன் விவரத்தை மற்றோரிடத்திற் காண்க.

4-3-41 புத்தூர் கிண்டர்கார்டன் பாடசாலையைக் காணச் செல்லல்:

இன்று காலை எமது பாடசாலை ஸெக்கண்டரி கிரேடு ஜூனியர் மாணவர்களும் சாரணர்களும், திருச்சியைச் சேர்ந்த புத்தூரிலுள்ள All Saints' Training School-க்குச் சென்று அக்கலாசாலையைச் சேர்ந்த கிண்டர்கார்ட்டன் (Nursery section) பகுதியைப் பார்வையிட்டனர்.

5-3-41 கிராபோர்டு விவசாயப் பண்ணையைக் காணல்:

நம் மாணவர்களனைவரும் இன்று காலை திருச்சி நகருக்குச் சமீபத்திலுள்ள "கிராபோர்டு" கிராமத்தில் அமைந்துள்ள ராவ்பகதூர் ஸ்ரீ N. S. குழந்தைசாமி பிள்ளையவர்களின் விவசாயப் பண்ணையைப் பார்வையிட்டு அங்கு நடைபெறும் நவீன விவசாய முறையின் சீர்சிறப்பை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் கண்கூடாகக் கண்டுகளித்துத் திரும்பினர்.

8-3-41 பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளின் தேர்தல்:

நம் பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்தைப் பிரபலப் படுத்துவதற்காக இன்று காலை நமது ஸீனியர் மாணவர்களின் காரியக்கூட்டம் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் கூடியது. நம் தமிழ் ஜில்லாக்களின் பற்பல இடங்களினின்று இங்கு வந்து பயின்று வெளியே ஆங்காங்குச் செல்லும் ஆசிரியர்கள் அந்தந்தப்ரதேசத்திலுள்ள நமது பழைய மாணவர்களுடன் ஒத்துழைத்து, சங்கத்தை விருத்திசெய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கென ப்ரதேசப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். விவரம் மற்றோரிடத்திற் காண்க.

9-3-41 பாப்பரசர் தினக் கொண்டாட்டம்:

இன்று காலை எமது இல்லத்தின் முன்பே பாப்பாண்டவர் கொடி பரவசமாய்ப் பறக்க, அகத்தாரனைவரும் அதிசயிக்கத்

தக்க மேஜையாய், எமது சபாமண்டபத்தே அமைந்த நாடக மேடையில் நம் பரிசுத்த தந்தையவர்களின் சிறந்ததோர் புகைப் படம் சிங்காரிக்கப்பட்டிருந்தது. பிற்பகல் 1-30 க்கு Rev. Bro. M. James அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் நமது பாப்பரசரின் மகத்துவத்தைப் பற்றி ஓர் உபந்நியாசம் நடைபெற்றது. கடைசியாக ஷை கூட் டத்தை நிர்வகித்த சபைத் தலைவருக்கும் காரியதரிசிக்கும் நன்றி கூறி முடிக்கவே பாப்பாண்டவர் வாழ்த்தோடு கூட்டம் முடி வடைந்தது. அன்றிரவு எம் பாடசாலை முகவாயில் பன்னூறு மின் விளக்குகள் "பரிசுத்த தந்தையே வாழ்க" என்ற தொடர் வடிவமாய் அமைந்து சாலையிற் செல்வோர்க்கெல்லாம் பேரானந்த மீந்து திகழ்ந்தது.

14–3–41 திருச்சினுப்பள்ளி "சாரணர் சங்கம்":

இன்று மாலை திருச்சி ஜில்லா சாரணர் சபைக் கூட்டம் திருச்சி ஜில்லா ஜட்ஜ் Mr. A. T. Coelho, B.A., B.L. அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் நமது பாடசாலை சாரணர்களும், முதிர்சாரணர்களும் ஷை பொதுக்கூட்டத்தில் Scout Rally-யில் கலந்துகொண்டனர். ஷை சபாநாயகரான தலைவர்க்குச் சாரணர்கள் அனைவரும் தங்கள் சாரண வந்த னத்தை (Scout Salute) சமர்ப்பித்தனர். நமது ஜில்லாவில் சாரணர் இயக்கத்தை வலுப்படுத்துவதற்கான வழிபாடுகளைப் பற்றி ஆலோசித்தபின் ராவ்சாகிப் காப்டன் ஸ்வாமி தேசிகாச்சாரி யார் அவர்களை வரும் வருஷத்தின் ஸ்கௌட் கமிஷனராகத் தேர்ந்தெடுத்தனர்.

15–3–41 நமது பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் ஆண்டு நிறை விழா:

இவ்வைபவம் இன்று மாலை எம் பாடசாலைத் தலைவரும் எம் ஆசிரியர் சங்கத்தின் தலைவரும் ஆகும் சங். A. லூர்து சாமி, B.A., L.T. அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் இனிது நிறை வெய்தியது. அவ்வமயம் "சிற்றுண்டி" (Tea-party) வழங்கப் பட்டவுடன், திருச்சி. E. R. உயர்தரக் கலாசாலை தமிழாசிரியர் ஸ்ரீ. K. நாகராஜராவ் அவர்கள் "ஆசிரியர் பணியின் சிறப்பு" என்னும் விஷயம்பற்றி அழகியதோர் சொற்பொழி வாற்றினர். சபா நாயகருக்கும், உபந்நியாசகருக்கும் வந்தனோபசாரம் காரிய தரிசியவர்களால் கூறப்பட்டது.

18-3-41 to 20-3-41 **T. S. L. C.** பரீட்சை :

ஷை பரீட்சை நமது போதனுமுறைப்பாடசாலை **ஸெண்ட** ரில் வழக்கம்போல் ஷை தேதிகளில் 3 தினங்கள் நடைபெற்றது. நமது பாடசாலை ஸெக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி ஹையர் கிரேடு மாணவர்களும், திருச்சி அரசாங்க போதனுமுறைப்பாட சாலை மாணவர்களும். இவ்வருஷம் முதன் முதலாக பரீட்சை எழுதவந்த இருங்களூர் New Tranquebar Training School மாணவர்களும் சேர்ந்து மொத்தம் 300 பேர் பரீட்சை எழுதினார்கள்.

நம் பாடசாலைத் தலைமையாசிரியர் அவர்கள் வழக்கம்போல் Chief Superintendent ஆக இருந்து பரீட்சையை ஒழுங்குபெற நடத்திவைத்தனர்.

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற சங்கீத பாட புத்தகங்கள்.

1. பாலசங்கீத வாசகம்
முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு ... 0—4—6

2. பாலசங்கீத வாசகம்
ஆசிரியர்களுக்கு ... 0—6—6

3. கர்னுடக சங்கீத போதினி
(முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு ... 0—6—0

4. கர்னுடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

5. கர்னுடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School,
St. Thomas Church Rd.,
OOTACAMUND.

பழைய மாணவர் சங்கம்

(R. Pitchai Pillai, காரியதரிசி)

பழைய மாணவர் தினக்கொண்டாட்டம்

நம் பழைய மாணவர் தினக்கொண்டாட்டம் 3-3-41 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு தாயப்பாடசாலையில் வெகு ஆடம்பரத்துடன் நடைபெற்றது. அவ்வமயம் கனம் ராவ் பஹதூர் N. S. குழந்தைசாமிபிள்ளை, விவசாய இலாகா, ரிட்டயர்டு டிப்டி டைரெக்டர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். நம் பாடசாலை ஆசிரியர்களும், வெளிப்பாடசாலைகளில் ஆசிரியத்தொழில் புரிந்துவரும் பழைய மாணவர்களும், நம் பாடசாலை ஆசிரிய மாணவர்களுமாக சுமார் 300 பேர் கூடியிருந்தனர். ஆரம்பத்தில் நம் பழைய மாணவர் சங்கத் தலைவர் சங். A. லூர்துசுவாமி, B.A.L.T. அவர்கள் எல்லோரையும் வரவேற்றார்கள். குழுமியிருந்த யாவருக்கும் சிறப்புடன் சிற்றுண்டி (Tea Party) வழங்கப்பட்டது. அவ்வமயம் சீனியர் மாணவர் சார்பாகவும், ஜூனியர் மாணவர் சார்பாகவும் பிரிவுபசார சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு, நம் பாடசாலை ஆசிரியர் சார்பாக ஸ்ரீ T. S. Ganapathy Iyer அவர்களால் நல்வாக்கும் கூறப்பட்டது. ஊக்கம் மிகுந்த நம் சங்க பொக்கிஷதார் ஸ்ரீ Y. சூசைமாணிக்கம் அவர்கள் சங்க அபிவிருத்தியை முன்னிட்டு அங்கத்தினர்மட்டில் இருக்க வேண்டிய ஊக்கத்தையும், ஒற்றுமைப்பையும்பற்றித் திறமையோடு பேசினர்கள். 1940-1941-ம் வருஷத்திய முதல் வருடாந்தர ரிப்போர்ட்டு காரியதரிசியவர்களால் வாசிக்கப்பட்டது.

பின்னர், ஆயிரக்கணக்கான நம் பழைய மாணவர்களில் சுமார் 136 பேர்தான் அங்கத்தினராய் தற்போது இருப்பது விசனிக்கத்தக்கதென்றும், இன்னும் பலர் சேர்ந்து சங்கத்தை வலுப்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நமது "பூங்கொத்து" விஷயமாய், தற்போது சுமார் 1500 சந்தாதாரர்கள் வரை, நம் தமிழ்நாடெங்கும் இருக்கின்றனர் எனினும், இன்னும் நம் பழைய மாணவர்களிற் பற்பலர் "பூங்கொத்தை" ஆதரிக்காமலிருப்பதால் அன்னவர்களைத் தூண்டி, பூங்கொத்தைப் படிக்கச்செய்வது பழைய மாணவர்களது முக்கிய கடமை என்றும் வற்புறுத்தப்பட்டது.

அப்பால் தலைவர் அவர்களால் நம் பாடசாலையில் நடந்தேறிய கால் பந்து பந்தய விளையாட்டில் ஜயம் பெற்ற நமது செக்கண்டரி ஜூனியர் மாணவர்க்குப் பரிசு அளிக்கப்பட்டது.

கடைசியாக ஷை கொண்டாட்டத்தை மிகச் சிறப்பாய் நடத்தி, அரிய புத்திமதிகள் புகட்டிய சபா நாயகர் அவர்களுக்கு

வந்தனோபசாரங்கூற, பாடசாலை வாழ்த்துப்பாவுடன் ஷெ விழா இனிது நிறைவெய்தியது.

8—3—41 சனிக்கிழமை இவ்வருடத்திய பழைய மாணவர் காரியக்கூட்டம் சங். தலைமை ஆசிரியரவர்களின் அக்கிராசனத் தின்கீழ் நடைபெற்றது. ஆரம்பத்தில் தலைவர் சுவாமியவர்கள் தாய்ப்பாடசாலை சார்பாகவும், பழைய மாணவர் சங்கத்தின் சார்பாகவும், பூங்கொத்தின் சார்பாகவும் பழைய மாணவரிடத்தில் இருக்கவேண்டிய அபிமானத்தையும் அக்கறையையும்பற்றிப் பேசினார்கள். குழுமியிருந்தவர்களில் சுமார் 30 பேர் பூங்கொத்தின் அபிவிருத்தியை முன்னிட்டு வெகுவாய் உழைப்பதாக வாக்குக் கொடுத்ததோடு, பலர் சங்கத்திற்கு தங்களாலான நன்கொடைகளைக் கொடுப்பதாகவும் கையொப்பமிட்டனர். நம் பழைய மாணவர் சங்கத்தின்மட்டில் தமக்குள்ள விசேஷ அன்பைத் தெரிவித்துக்கொள்ளுமாறு கீழ்க்கண்ட பழைய மாணவர்கள் வெள்ளிப் பதக்கங்கள் பரிசளிப்பதாக மனமுவந்து ஒத்துக்கொண்டனர். விவரங்கள் பின்வருமாறு :—

1. **G. A. S. Manuel** (S. 2). சர்க்கார் பரீக்ஷையில் இரண்டாவதாகத் தேர்ச்சிபெறும் Secondary Grade மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கம்.

2. **F. L. Jegaraj** (S. 2). சர்க்கார் பரீக்ஷையில் இரண்டாவதாகத் தேர்ச்சிபெறும் Higher Ele. Grade மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கம்.

3. **K. Venkata Rao** (S. 2). பாடசாலை வைபவத் தன்று, போட்டிப் பந்தய விளையாட்டில் (School Day Sports) முதல்தரமாய் விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கம் (Champion Medal).

4. **P. Savarinathan** (H. 2). ஞானோபதேசத்தில் முதல்தரமாகத் தேர்ச்சிபெறும் Higher Ele. Grade மாணவருக்கு ஒரு வெள்ளிப்பதக்கம்.

5. **T. Thomas Seeni** (H. 2). 1941-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்குள் மற்றவர்களைவிட அதிகமான பூங்கொத்து சந்தாதார்களைச் சேர்ப்பவருக்கு பாடசாலை தினவிழாவன்று வழங்கப்படும் ஒரு வெள்ளிப்பதக்கம்.

பின்னர் தலைவரவர்கள் மேற்படி வாக்களித்தோருக்கும், ஏனையோருக்கும் தமது மனமார்ந்த வாழ்த்துதலைக் கூறினார்கள். காரியதரிசியவர்களால் எல்லோருக்கும் வந்தனம் கூறப்பட்டு, கூட்டம் இனிது கலைந்தது.

கடவுள் மகிமை

4, 5-ம் வகுப்புகள்

A. Gnanadickam, *Music Teacher*,

St. Joseph's Higher Elementary School, Ootacamund.

ஸ		ரி		க	ம		ப		த		நி

கோட் மெட் 29.] **கண்ணிகள்** [திரிஸ்ரகதி ஆதி.

1. பரம கருணை முதல்வ இறைவன்
பதம லர்போற் றி; ;,
வரவும் பாலர் மனதில் நாளும்
மகிழ்செய் வாய்த்தே ற்றி, ;,

2. தே.ற்றும் மழையும் வெயிலும் பனியும்
கா.ற்றும் முறை யே, ;,
தோ.ற்ற தருபூ மலர்காய் பழம்
துளிரக் குறை யா, ;,

3. குறையா ஒளிரும் சூ.ர்ய ச.ந்த்ர
உடுக்கள் விந்தை யின்; ;,
முறையைக் கண்டுன் மகிமை யாவர்
மு.ற்றும் போற்று வர்; ;,

4. போ.ற்றும் பறவை இனியக் கா.னம்
புகழிம் மாட்சி யே; ;,
ஏ.ற்ற மன ஸா.ந்தி யெ.ங்கும்
இசைந்த காட்சி யே, ;,

5. கா.ட்சி இரவும் பகலும் சௌ.க்யம்
கா.ண ஜீவர்க் கு; ;,
ஆ.ட்சி சிறந்து விளங்க ஞா.னம்
அருள்வர் பாலர்க் கு; ;,

6. பா.ல அருவி நதியாம் கடலில்
பா.ய நீர்தங் கும்; ;,
கா.ல நிலையைப் பொருந்தி மேகக்
கணம்ம ழைபொங் கும்; ;,

7. பொ.ங்கும் பொருளும் திரளத் தரையில்
புகழாய் ஜீவர் கள்; ;,
த.ங்கி வாழ வழிதி றந்த
த.ற்ப ராச ரண்; ;,

ஸ ஸ ஸ க க க ப ப ப த த ரி
ப ர ம கருணை முதல்வ இறைவன்
ஸ் ஸ் ஸ் நீ த பா, ;,
ப த ம லர்போற் றி, ;,
ஸ் ஸ் ஸ் நீ த ரிரிரி ஸ்ா நி
வ ர வு ம் பாலர் மனதில் நாளும்
ப ப ப த ா நி ஸ் ா, ;,
மகிழ்செய் வாய்தேற் றி, ;,

விடுகதை விடைகள்

(1) கொத்து 31, மலர் 9, பக்கம் 259. விடுகதையின் விடை "முட்டைப்பூச்சி"—by A. Alphonse Fernando.

(2) கொத்து 31, மலர் 9, பக்கம் 264—யோசனைக் கணக்கின் விடை :—

முதலாவதாக 9 என்ற எண்ணை 9-ஆல் வகுக்க, 1 விடை வருகிறது. அத்துடன் 9-ஐக் கூட்ட 10 ஆகிறது. அதோடு 9-ஐக் கூட்ட 19 ஆகும். இப்பொழுது இரண்டு ஒன்பதுகள் மீந்துள்ளன. அவற்றைப் பெருக்க 81 ஆகிறது. அதோடு முன்னால் வந்த 19-ஐக் கூட்டினால் 100 ஆகிறதல்லவா?—by George Sydney.

தமிழ்நாடு ஆவணக் காப்பக
182453

SUPERIOR

School Chalk Crayons!

BUY INDIAN !

SUPPORT INDIAN INDUSTRY !

BEST QUALITY, DURABLE

SMOOTH & STRONG ! !

THE STANDARD CHALK CO.,

Old Post Office Road,

CANTONMENT, TRICHINOPOLY.

Suppliers of

White & Coloured Chalk Crayons.

PATRONISED BY

MANY HIGH SCHOOLS, COLLEGES

AND PUBLIC INSTITUTIONS.

A trial order will convince you.

Patronise Indian Industry.

DRILL BOOKS

சிறந்த சிறு விளையாட்டுகள்! உயர்ந்த விஷயங்கள்!!
ஆங்கிலத்திலும் எளிய தமிழ் நடையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன!!!

ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு இன்றியமையாதது

"PRINCIPLES AND GAMES"

(2 தனி புத்தகங்கள்)

துரைத்தனத்தாரின் சீர்திருத்த முறைப்படி புதுப் பாடத்திட்டத்திற்கேற்ற விளையாட்டுகளும், தேகப்பயிற்சிகளும், நவீன அபிநய விளையாட்டுகளும், (விவரணப்படங்களுடன்) அடங்கியுள்ளன.

இரு புத்தகங்களும் சேர்ந்து ரூ. 1-8-0-க்குக் கொடுக்கப்படும். தபால்கூலி பிரத்தியேகம். ஒரே தடவையில் 6 செட் புத்தகங்களுக்கு மேல் வாங்குகிறவர்களுக்கு தபால்கூலி இனாம். 12 செட் புத்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு 1 செட் புத்தகம் இனாம்.

ஏஜெண்டுகள் தேவை:
தக்க கமிஷன் உண்டு.

விலாசம்:—Mr. V. M. JOSEPH,
Author and Publisher,
R. C. Secondary Training School,
TRICHINOPOLY.

சிறுவர் அறிவுக் கதிர்

ESTD 1935

CHILDREN'S MAGAZINE

சிறுவர்களுக்கேற்ற சிறந்த மாதப்பத்திரிகை
வருட சந்தா உள்நாடு 12 அணா வெளிநாடு 1½ ரூ
டிபாஸிட் கட்டும் ஏஜண்டுகள் எங்கும் தேவை
சிறுவர் அறிவுக் கதிர் ஆபீஸ் எ. ரோடு, S.I.R.Y.

"ஆரம்பக்கல்வி"

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கு உழைத்துவரும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை.

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்தமான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனாம்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ், 94. 95. பதக்கெருவு, மன்னடி, மதராஸ்

Reg. No. M. 1354

THOMAS SPORTS

[Pro : I. PONNIAH PILLAI]

CLIVE'S HOUSE, TEPPAKULAM P. O.,

TRICHINOPOLY



OFFICIAL STOCKISTS FOR

SLAZENGER'S Ltd.

LONDON.

The CHEAPEST HOUSE FOR

Spalding Australian Dunlop
American Fulcrum & Japan

TENNIS FRAMES

WE UNDERTAKE

RE-STRINGING REPAIRING
RE-SHAPING & REGLUEING

WE MANUFACTURE THE BEST & GUARANTEED

NETS, BADMINTON BALLS IN ANY COLOUR IN ANY WEIGHT

A TRIAL IS SOLICITED

Your best Selection may be made at our Show Room.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.